2013 பிப்ரவரி 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. வேலுமணி அவர்கள்.*

திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது குடும்ப தெய்வம், வருங்கால பாரதம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்கி, தொண்டாமுத்தூர் தொகுதி விவசாயிகளுடைய 40 வருட கோரிக்கையை ஏற்று, விவசாயிகளின் வாழ்வாதாரத்தையும், 24 கிராம மக்களின் குடிநீர்ப் பிரச்சினையையும், வன விலங்குகளுடைய குடிநீர்ப் பிரச்சினையும் தீர ஆனைமடுவில் தடுப்பணை கட்ட ஆணையிட்ட காவிரித் தாய், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு தொண்டாமுத்தூர் தொகுதி மக்களின் சார்பாக கோடானுகோடி நன்றி மலர்களை புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 17, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

17—

கால்நடை கிளை நிலையங்கள்

***226—டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பத்மனாபபுரம் தொகுதி, பேச்சிப்பாறை, சுருளக்கோடு ஆகிய பகுதிகளில் கால்நடை கிளை நிலையங்கள் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேச்சிப்பாறை பகுதியிலும், சுருளக்கோடு பகுதியிலும் கால்நடை கிளை நிலையம் அமைக்கப்படுமா என்று வினா

எழுப்பியிருக்கிறார்கள். அரசிலே ஒரு விதி இருக்கிறது. அவர் குறிப்பிடுகின்ற கிராமத்திலே 3,000 கால்நடை அலகுகள் இருந்தால், அங்கே கால்நடை கிளை நிலையம் அமைக்கப்படும். ஆனால், உறுப்பினர் குறிப்பிடுகின்ற கிராமங்களிலே 3,000—க்கும் குறைவாக கால்நடைகள் இருக்கின்ற காரணத்தினால், அங்கே கால்நடை கிளை நிலையம் அமைக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் இல்லை. இருப்பினும், எதிர்காலத்திலே 3,000 கால்நடை அலகுகள் அதிகரிக்கும் பட்சத்தில் அங்கே கால்நடை கிளை நிலையம் அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன் அவர்கள்.*

டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்மனாபபுரம் தொகுதிக்குட்பட்ட பேச்சிப்பாறை, சுருளக்கோடு ஆகிய மலைப் பகுதி கிராமங்களில் 3,000—க்கும் அதிகமாக பழங்குடி மக்கள் ஆடு, மாடு ஆகிய கால்நடைகளை வளர்த்து வாழ்க்கை நடத்தி வருகிறார்கள். அவர்கள் குலசேகரத்தில் அமைந்துள்ள கால்நடை மருத்துவமனைக்கு வரவேண்டுமானால், சுமார் 15 முதல் 20 கிலோ மீட்டர் தூரம் வரை பயணம் செய்ய வேண்டியிருக்கின்றது. ஆகவே, இப்பகுதியில் விரைவில் கால்நடை கிளை நிலையம் அமைக்கவும், கால்நடை வளர்க்கும் ஏழை மக்கள், பால் உற்பத்தியாளர்கள், கூட்டுறவு சங்கங்களின் மூலமாக மானிய விலையில் கால்நடைத் தீவனம் வழங்கவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குலசேகரம் பகுதியில் ஒரு கால்நடை மருந்தகமும், திருவட்டாறு பகுதியில் ஒரு கால்நடை மருந்தகமும், அதற்கு அருகில் இருக்கக்கூடிய ஆத்தூரில் ஒரு கால்நடை கிளை நிலையமும், பூவன்கோட்டில் ஒரு கால்நடை கிளை நிலையமும், பொன்மனையில் ஒரு கால்நடை கிளை நிலையமும் என

திருவட்டாறு ஒன்றியத்தில் இரண்டு கால்நடை மருந்தகமும், மூன்று கால்நடை கிளை நிலையமும் இயங்கிக்கொண்டிருக்கின்றன. அங்கு இருக்கின்ற கால்நடைகளுக்கு அந்த மருத்துவ வசதிகளே போதுமானது என்பது அரசினுடைய கருத்து. இருந்தாலும், எதிர்காலத்தில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு கால்நடை கிளை நிலையம் அமைப்பது குறித்து பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன் அவர்கள்.

டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்மனாபபுரம் தொகுதிக்கு உட்பட்ட, சடையமங்கலம் ஊராட்சியில், கால்நடை கிளை நிலையக் கட்டடம் எஸ்.ஜே.ஜி.எஸ்.ஒய். திட்டத்தின்கீழ் கட்டிமுடிக்கப்பட்டு, அங்கு மருத்துவர் இல்லாத காரணத்தால், கிளை நிலையம் இயங்காமல் இருக்கிறது. ஆகவே, உடனடியாக கால்நடை மருத்துவரை நியமனம் செய்யவும், குக்கிராமங்களில் உள்ள கால்நடைகள் பயன்பெறும் வகையில் வாங்கப்பட்டுள்ள நடமாடும் கால்நடை மருந்தக வாகனம் ஓட்டுனர் இல்லாமல் இருப்பதால் உடனடியாக ஓட்டுனரை நியமனம் செய்யவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 18, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.